தமிழக சட்டப் பேரவை.

[இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் நான்காவது சட்டப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடர்.]

திங்கட்கிழமை, 1968 பிப்ரவரி 12

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

(i) திரு. பி. துரைசாமி ரெட்டியார், (ii) திரு. எம். ஜெங்கல் ரெட்டியார்—முன்னாள் உறுப்பினர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1957-லிருந்து 1962-வது ஆண்டுவரை ஆரணி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. துரைசாமி ரெட்டியார் அவர்கள் 12—10—1967 அன்று மறைந்து விட்டதைக் குறித்தும்,

1957-லிருந்து 1962-வது ஆண்டுவரை செஞ்சி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டுச் சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினராகவும், 1966-லிருந்து சட்டமன்ற மேலவையின் தென்னாற்காடு மாவட்ட உள்ளாட்சித் தொகுதியின் சார்பில் உறுப்பினராகவும் இருந்துவந்த திரு. எம். ஜெங்கல் ரெட்டியார் அவர்கள் 9—2—1968 அன்று காலமானதைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அவர்களை இழந்த குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து, ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Shift system in Queen Mary's College

*1 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether shift system has been introduced in the P.U.C. in Queen Mary's College, Madras, from this year; and

(b) if so, the additional number of students admitted?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்த மாலை வகுப்புகள் மற்றக் கல்லூரிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, 'மாற்று முறை வகுப்பு ஏற்பாடு' (ஷிப்ட் சிஸ்டம்) பற்றி உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருந்தார்கள். அதற்கு இல்லை' என்று பதில் அளித்தேன். ஆனால், மாலை நேர வகுப்புகள் சென்னை இராணி மேரிக் கல்லூரியில் இருந்து கொண்டு வருகின்றன. சென்ற ஆண்டு, இராணி மேரிக் கல்லூரியில் 'மாற்று முறை வகுப்பு ஏற்பாடு' (ஷிப்ட் சிஸ்டம்) வைக்கலாமா என்று யோசிக்கப்பட்டு, இருக்கின்ற நெருக்கடியைத் தீர்க்க மேலும் இரண்டு பிரிவுகளை ஏற்படுத்தி, அதன் மூலமாக 160 மாணவியர்களுக்கு இடம் கொடுத்தால் போதும் என்று கருதி, ஷிப்ட் சிஸ்டம் வைக்காமல் இரண்டு பிரிவுகள் கூடுதலாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இராணி மேரிக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : ஐயா, சென்ற ஆண்டு, கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளில் சேரவேண்டும் என்பதற்காகப் போடப்பட்ட விண்ணப்பத் தாள்கள் எத்தனை? அவற்றில் எத்தனை தாள்கள் அங்கீகரிக்கப்பட்டு, சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை? விண்ணப்பம் செய்துகொண்ட அனைவருமே சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தால் மாற்றுத் திட்டம் வைத்திருக்கவேண்டாமே. மாற்றுத் திட்டம் வேண்டுமென்ற நிலையில், எத்தனை மாணவர்களின் விண்ணப்பத் தாள்கள் நிராகரிக்கப்பட்டன என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். ஆனால், கூடுமானவரை நிலைமையைச் சமாளிப்பதற்காகப் பல கல்லூரிகளில் அதனுடைய பிரிவுகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த வகையில், கலைக் கல்லூரிகளில் பிரிவுகள் அதிகப்படுத்தப் பட்டன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த மாற்று 'முறை வகுப்பு ஏற்பாடு' (ஷிப்ட் சிஸ்டம்) வேறு எந்தக் கல்லூரிகளில் விரிவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எந்தக் கல்லூரியிலும் மாற்று முறை வகுப்பு ஏற்பாடு அமலுக்குக் கொண்டுவரப் படவில்லை. அடுத்த ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட வேண்டுமா என்று யோசிப்பதற்காக, அதற்கான முன்னேற்பாடுகள் செய்யும் படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒருகால் அதிகமான எண்ணிக்கை வருமானால் சமாளிப்பதற்கு முடியுமா, எந்த எந்தக்

1968 பிப்ரவரி 12]

கல்லூரியில் இட வசதி இருக்கிறது, ஆசிரியர் வசதி இருக்கிறது என்பன போன்ற விவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு பல்கலைக் கழகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Are the Government satisfied that there are enough number of seats in the Government Colleges ? If so, what is the basis for a large number of applications and also 'Letters to the Editor' appearing in the Press that there are no seats in a number of colleges ? In the light of the great rush to the Colleges, do the Government really think that the number of seats has been considerably increased. May I know what steps the Government propose to take in the matter ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு 48,000 இடங்கள் இருந்தன. சென்ற ஆண்டு, 56,000 இடங்கள் என்னும் அளவுக்கு எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. அதன்மூலம் நிலைமை ஓரளவு சமாளிக்கப்பட்டது. 'இட நெருக்கடி' என்னும்போது, அது சில பாடங்களைப் பொறுத்தும், சில கல்லூரிகளைப் பொறுத்தும் ஏற்படுகிறது. சிலபல கல்லூரிகளில் இன்னும் இடங்கள் இருக்கின்றன. ஆனால், சில குறிப்பிட்ட கல்லூரிகளில்தான் சேர வேண்டும் என்று மாணவர்கள் முன்வரும் காரணத்தினாலும், அதுவும் சில குறிப்பிட்ட பாடங்களை எடுத்துப் படிக்கவேண்டும் என்று மாணவர்கள் விரும்புகிற காரணத்தினாலும் சில நெருக்கடிகள் இருக்கின்றன. ஓரளவுக்குச் சென்ற ஆண்டு சமாளிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு வருகிற நிலைமையைப் பொறுத்துத்தான், மாற்று முறை வகுப்பு ஏற்பாடு எங்கெங்கே செய்யலாம், எந்த அளவுக்கு நிலைமையைச் சமாளிக்கலாம் என்பது ஆராயப்பட்டுக் கொண்டு வருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஒரு சில கல்லூரிகளில் மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பித்துக் கொண்டும், போதுமான இடம் இல்லாத காரணத்தால், 'ஷிப்ட் சிஸ்டம்' ஏற்படுத்தவேண்டிய நிலைமையும், மற்ற சில கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருந்தும் அந்த இடங்கள் நிறைவு படாமல் காலியாக இருக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே, இடம் இடைக்காமல் கல்லூரியில் சேர்த்து படிக்க முடியாத நிலையில் இருக்கும் மாணவர்களை, இடங்கள் காலியாக இருக்கும் கல்லூரிகளில் போய்ச் சேர்ந்து படிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த நல்ல யோசனையைச் சர்க்காரேதான் அமல் செய்ய வேண்டும் என்பது இல்லை. கனம் உறுப்பினர்கூட, மாணவர்களையோ பெற்றோர்களையோ பார்த்துச் சொல்லலாம்.

திரு. கே. விநாயகம் : ஐயா, மனுக்கள் அதிகமாக வருவதனாலே, அனைவருக்கும் இடம் தேடித்தர முடியாத சிக்கலான நிலைமை அரசாங்கக் கல்லூரிகளில் இருப்பதால், அவர்களை 'ஷிப்ட் சிஸ்டத்'தில் படிக்கவைக்க முடியுமா என்ற கேள்வியை

எழுப்பியபோது, "அப்படி அதிகமாக வந்தால் வருகிற ஆண்டு பார்த்துக்கொள்ளலாம்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அதையொட்டி, அப்படி அதிகமாக மனுக்கள் வந்து, அவர்களுக்காக ஒரு வேளை 'ஷிப்ட் சிஸ்டம்' வைப்பது என்று முடிவு செய்தால், அதற்குத் தகுந்தாற்போல் 'எக்ஸ்ட்ரா ஸ்டாஃப்' போடுவார்களா? அல்லது இருக்கிறவர்களையே வைத்துக்கொண்டு, காலையில் கொஞ்சம் பார்த்துக்கொள், மாலையில் கொஞ்சம் பார்த்துக்கொள் என்று சொல்லி கல்வியின் தரம் குறைகிற அளவுக்கு ஏதாவது செய்துவிடுவார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தரம் குறையாத முறையிலே திட்டங்கள் வகுக்கப்படும்.

Prayer songs at schools

*2 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether singing of Telugu songs at prayers at local schools in Hozur taluk in Salem district has been discontinued under instructions from the officials of the Education Department, recently; and

(*b*) if so, the reasons for taking such a step?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : சிறுபான்மை வகுப்பினருக்கு, தங்களுடைய தாய்மொழியில் பாடுவதற்கு, 'ப்ரேயர்' செய்வதற்கு உரிமை கிடையாதா? அதை அந்த வட்டாரக் கல்வி அதிகாரி, அரசாங்கத்தினுடைய உத்தரவின்பேரில் தடுத்தாரா? அப்படித் தடுத்திருந்தால், அந்தச் செயலைத்தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஓசூர் உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 1,200 மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 320 பேர் தமிழ் எடுத்துப் பயிலுகிற மாணவர்களாகவும் பாக்கிப் பேர்கள் தெலுங்கு எடுத்துப் பயிலுகிற மாணவர்களாகவும் இருக்கிறார்கள். தொடர்ந்து அங்கே தெலுங்கிலே வழிபாடு முறை நடத்தப்பட்டு வந்தது. தமிழிலும் வழிபாடு நடைபெறவேண்டும் என்று 320 தமிழ் மாணவர்கள் தலைமையாசிரியரிடத்தில் விண்ணப்பித்து வந்தார்கள். அது பற்றிக் கவனிக்கலாம் என்று தலைமையாசிரியர் சொல்லிக் கொண்டே வந்தார். அதற்குப் பிறகு, தமிழில் பயிலும் மாணவர்கள், தமிழில் வழிபாடு வைக்க வேண்டும் என்று சொல்லி, 25—8—1967 அன்று பள்ளிக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்யும் அளவுக்கு வந்தார்கள். அதன் காரணமாக, தெலுங்கு மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் மனக் கசப்பு ஏற்பட்டு, அதன் மூலமாக சில கலவரங்கள்கூட ஏற்பட்டு, அங்கங்கே